அனுமதி இலவசம்
+2 மாணவர்களே
உங்கள் கனவு
படிப்பை தேர்வு செய்ய
சரியான வாய்ப்பு
தினமலர் உண்மையின் உரைகல்
இணைந்து வழங்கும்
SRI KRISHNA INSTITUTIONS
உங்களின் கனவு தேடல்...
80+ முன்னணி கல்வி நிறுவன ஸ்டால்கள்
வழிகாட்டி
வல்லுனர்களின் கருத்தரங்குகள்
Powered by:
AMRITA
SRI RAMAKRISHNA INSTITUTIONS
28, 29 மார்ச், 2026 10:00a.m. – 6:30p.m.
சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம்
இலவச முன்பதிவுக்கு
QR Code ஸ்கேன் செய்து அல்லது
95667 77833 என்ற
வாட்ஸ்–அப் எண்ணிற்கு RGN
என்று டைப் செய்து அனுப்பவும்

அனுபவத்தை எழுதும் மொழிக்கு ஞானபீட விருது கொடுப்பது ஏற்புடையதே!

– ராஜ்கண்ணன்,
பத்திரிகையாளர்

விருதும் சர்ச்சையும் இரட்டைப் பிள்ளைகள். ஞானபீட விருதும், அதற்கு விலக்கல்ல. அண்மையில், கவிஞர் வைரமுத்துவுக்கு, 2025ம் ஆண்டுக்கான ஞானபீட விருது அறிவிக்கப்பட்டிருப்பது, தற்போது விவாதப் பொருளாகியுள்ளது.

ஞானபீட விருது வழங்கும் அமைப்பு, தொழிலதிபரான சாகு சாந்தி பிரசாத் என்பவரால், 1944ம் ஆண்டு நிறுவப்பட்டது. ஞானபீட விருதுக்கும் மத்திய அரசுக்கும் நேரடித் தொடர்பு ஏதுமில்லை.

ஞானபீட விருதுக்கான விதிகளின்படி, ஒரு மொழிக்கு விருது அறிவிக்கப்பட்டால் அடுத்துவரும் இரு ஆண்டுகளுக்கு அம்மொழிப் படைப்பு, பரிசீலனைக்குத் தகுதி பெறாது.

பங்களிப்பு

ஒவ்வொரு மொழிக்கும், மூன்று அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படுகிறது. அக்குழு, பேராசிரியர்கள், இலக்கியவாதிகள், திறனாய்வாளர்கள், கல்வி நிறுவனங்கள், மொழி மேம்பாட்டு அமைப்புகள் அனுப்பும் அனைத்துப் பரிந்துரைகளையும் பரிசீலித்து, பின், தன் பரிந்துரையை ஞானபீட விருதுத் தேர்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கிறது.

அதற்கும் மேம்பட்டது தேசியத் தேர்வுக்குழு. இந்த அமைப்பு, பரிந்துரைக்கப்பட்ட படைப்பாளியின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளை, ஹிந்தி அல்லது ஆங்கில மொழியில் மாற்றம் செய்த பின்னரே, பரிசீலித்து மதிப்பீடு செய்யும். அதன்பின், குறிப்பிட்ட ஆண்டுக்கான ஞானபீட விருதை அக்குழு அறிவிக்கும்.

இந்த ஆண்டு பேராசிரியர் பிரதீபா ராய் தலைமையில் அமைந்த தேர்வுக் குழுவில், புகழ்மிக்க அறிஞர்கள், இலக்கிய ஆளுமைகள், ஞானபீட மூத்த வெளியீட்டு அதிகாரி டாக்டர் மகேஷ்வர் ஆகியோர் இடம்பிடித்திருந்தனர்.

விருது குறித்து, பாரதிய ஞானபீடம் அமைப்பின் இயக்குநர் ஆர்.என்.திவாரி வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ் இலக்கியம் படைப்பாற்றல், தனித்துவமான கவிதை வெளிப்பாடு ஆகியவற்றுக்கு, வைரமுத்து ஆற்றிய சிறப்பான பங்களிப்புக்காக அவருக்கு, 2025ம் ஆண்டுக்கான ஞானபீட விருது வழங்கப்படுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்விருது அறிவிப்பு வெளியான பின், 'வைரமுத்துவுக்கு ஞானபீட விருது என்பது தமிழ் இலக்கியத்தின் முகத்தில் காறி உமிழ்ந்ததற்கு நிகர்' என்பதில் துவங்கி 'வைரமுத்து கவிஞரே இல்லை' என்பது வரையிலான பல்வேறு வகையான வசைபாடல்கள், சமூக ஊடகங்களில் வெளிவரத் துவங்கின.

வைரமுத்துவின் படைப்புகள்: எழுபதுகளின் துவக்கத்தில், வைரமுத்துவின், 'வைகறை மேகங்கள்' என்ற கவிதை நூல், கவிஞர் கண்ணதாசன் அணிந்துரையுடன் வெளியானது. தொடர்ந்து வெளியான இவரின், 'திருத்தி எழுதிய தீர்ப்புகள்' எனும் புதுக்கவிதைத் தொகுதி, இவரின் புலமையை வெளிப்படுத்தியது.

தொல்காப்பியர் துவங்கி கபிலர், வள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள், பாரதியார், பாரதிதாசன், புதுமைப்பித்தன், கண்ணதாசன், ஜெயகாந்தன் உள்ளிட்ட 24 பேராளுமைகளைப் பற்றி 'தமிழாற்றுப் படை' என்ற தொகுப்பு நூலை எழுதி உள்ளார்.

கள்ளிக்காட்டு இதிகாசம்

இவரின் கள்ளிக்காட்டு இதிகாசத்தையும், கருவாச்சி காவியத்தையும் படித்தவர்கள் ஏராளம். தெற்கத்திச் சீமையில் உழலும் எளிய மாந்தர்கள் வாழ்வின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை ரத்தமும் சதையுமாக, அச்சு அசலாக, அவர்கள் மொழியிலேயே பதிவுசெய்த நாவல்கள் இவை. 'கள்ளிக்காட்டு இதிகாசம்' சாகித்ய அகாடமி விருது பெற்றது.

இவர், திரைப்படப் பாடல்களுக்கு இலக்கியத் தரம் கிட்ட வேண்டும் என்று முயன்றுகொண்டே இருப்பவர். அம்முயற்சியில் கணிசமான வெற்றியும் கண்டவர்.

விருது அறிவிக்கப்பட்ட படைப்பாளியின் ஆற்றலை, மொழி பங்களிப்பை கருத்தில் கொள்ளாமல், 'அந்தத் துறையில் அவரின் சாதனை என்ன? இந்தத் துறையில் அவரின் சாதனை என்ன?' என்று வினா எழுப்புவது சரியன்று

'நறுமுகையே நறுமுகையே நீயொரு நாழிகை நில்லாய்; அற்றைத் திங்கள் அந்நிலவில் நெற்றித் தரள நீர்வடிய கொற்றப் பொய்கை ஆடியவள் நீயா?' என்பதும், 'மனிதா மனிதா இனிஉன் விழிகள் சிவந்தால் உலகம் விடியும்' என்பதும், 'என்மேல் விழுந்த பனித்துளியே இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?' என்பதும், 'பனி விழும் மலர்வனம் உன் பார்வை ஒருவரம்; இனி வரும் முனிவரும் தடுமாறும் கனிமரம்' என்பதும், திரைப்பாடலிலும் இலக்கியத்தை இழைத்துவிடும் முயற்சி.

ஞானபீட விருதாளர்கள் பலரும் திரைப்படத் துறையோடு தொடர்புடையவர்கள்தான்.

அனுபவம்

கன்னட எழுத்தாளர், சிவராம்காரந்த், மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரபிள்ளை, தெலுங்கு மொழிக் கவிஞர் சி.நாராயண ரெட்டி, கன்னட மொழி எழுத்தாளர் யு.ஆர். அனந்தமூர்த்தி, மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் நாயர், கன்னட எழுத்தாளர் கிரீஷ் கர்னாட், மலையாளக் கவிஞரும் திரைப்பட பாடலாசிரியருமான ஓ.என்.வி.குரூப் ஆகியோரின் எழுத்துக்கள் திரைப்படங்களாகி உள்ளன.

தமிழில் ஏற்கனவே ஞானபீட விருது பெற்ற அகிலனும், ஜெயகாந்தனும் கூடத் திரைப்படத் தொடர்புடையவர்களே. அகிலன் எழுதிய 'பாவை விளக்கு' நாவல் அதே பெயரில் திரைப்படமானது. அவரின், 'வாழ்வு எங்கே?' தொடர்கதை, குலமகள் ராதை என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டது. அகிலனின் 'கயல்விழி' நாவல், எம்.ஜி.ஆர்., நடிப்பில், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்ற பெயரில் திரைப்படமானது.

ஜெயகாந்தனின் 10 கதைகள் திரைப்படமாகி உள்ளன.

'திரைப்பாடலில் வைரமுத்துவின் சாதனையை மறுக்கவில்லை. ஆனால், அவரின் கவிதைப் பங்களிப்பிற்காக இவ்விருது வழங்கப்படுவதால், தமிழின் உயர்கவிஞர் இவர்தான் என்று பிற மாநிலத்தவர் கருதுவரே...' என்று சிலர் கவலை கொள்கின்றனர்.

விருது அறிவிக்கப்பட்ட படைப்பாளியின் ஆற்றலை, மொழி பங்களிப்பைக் கருத்தில் கொள்ளாமல் 'அந்தத் துறையில் அவரின் சாதனை என்ன? இந்தத் துறையில் அவரின் சாதனை என்ன?' என்று வினா எழுப்புவது சரியன்று.

ஒரு படைப்பாளிக்கு மிக முக்கியமானது, அனுபவம் மற்றும் அந்த அனுபவத்தை வெளிப்படுத்தும் மொழி.

ஒரு கள்ளிக்காட்டில் பிறந்து, வறண்ட வாழ்க்கையோடு வளர்ந்து, ஆடு மாடுகளோடு பழகி, மக்களின் துன்பங்களோடு வாழ்ந்து, அரிசிச்சோறு பார்க்காத வாழ்க்கை முறையோடு வளர்ந்து, வறுமையைச் செல்வமாகப் பெற்று, கல்லோடும் முள்ளோடும் அனுபவங்களைப் பெற்றவர் வைரமுத்து.

செவ்வியல் மொழியை முறைப்படி எம்.ஏ., படித்து அறிந்தவர். அவருக்கு சங்க இலக்கியமும் தெரியும்; சமகால இலக்கியங்களும் தெரியும்; சிற்றிலக்கியமும் அவர் அறிவார்; பக்தி இலக்கியங்களும் அவருக்குப் பாடம்.

ஆனால், கள்ளிக்காட்டு இதிகாசத்திலும், கருவாச்சி காவியத்திலும் அவர் எழுதியிருக்கும் வட்டார வழக்கு மொழியை எவரும் எளிதில் கற்றுவிட முடியாது. அந்த மண்ணோடும் மக்களோடும் வாழ்ந்தவனுக்குத் தான் அது வசப்படும்.

பூடகம் இல்லை

வைரமுத்து மக்களின் எழுத்தாளன்; மக்கள் கவிஞர். அதனால்தான் அவரது எழுத்துக்களில் பூடகம் இல்லை; பூட்டி மறைக்கும் இருண்மை இல்லை. ஒரு புலவன் தன் புலமையை வெளிப்படுத்தும் அலங்கார அணிகள் இல்லை. திறந்தவெளி வாழ்க்கையில் திறந்தவெளி மனிதர்களைத் திறந்தவெளியில் சொல்வதுதான் வைரமுத்து பாணி.

வைரமுத்து தமிழோடு வாழ்கிறார்; அவர் பெற்ற பெருமை எல்லாம் தமிழ் பெற்ற பெருமை.

தமிழில் அரைநூற்றாண்டுக்கும் மேலாக, கவிதை, திரைப்பாடல், சிறுகதை, நாவல், கட்டுரை எனப் பல்வேறு பரப்புகளிலும் இடையறாது இயங்கிவரும் கவிஞர் வைரமுத்துவுக்கு ஞானபீட விருது வழங்கியது ஏற்புடையதே!

ஒரு ராஜ்யசபா 'சீட்' வி.சி., தீர்மானம்

சென்னை, மார்ச் 24–

சென்னையில் நேற்று, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் நடந்தது.

அதில், 'கடந்த 2019 முதல், தி.மு.க., கூட்டணியின் வெற்றிக்கு, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மிகப்பெரிய அளவில் பங்களிப்பு செய்துள்ளது. எனவே, கட்சியின் வலிமைக்கேற்ப, தி.மு.க., கூட்டணியில், இரட்டை இலக்கத்தில், தொகுதிகளை கேட்டுப் பெற வேண்டும்.

'மேலும், வரும் 2028ல் நடக்கும் ராஜ்யசபா தேர்தலில், வி.சி.,க்கு ஒரு இடத்தை பெற வேண்டும்' என்பது உட்பட எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க., கூட்டணியில் மா.கம்யூ.,வுக்கு 5 தொகுதிகள்

சென்னை, மார்ச் 24–

நீண்ட இழுபறிக்கு பின், தி.மு.க. கூட்டணியில், மார்க்.கம்யூ., கட்சிக்கு, ஐந்து தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இரு கட்சிகளுக்கும் இடையே, தொகுதி பங்கீடு தொடர்பாக, இழுபறி நீடித்து வந்தது. கடந்த 2021 தேர்தலில், மார்க்சிஸ்ட்டுக்கு, ஆறு தொகுதிகள் ஒதுக்கப்பட்டதில், இரண்டு தொகுதிகளில் வென்றது. இந்த தேர்தலில், தி.மு.க., கூட்டணியில், கூடுதல் கட்சிகள் இடம் பெற்றதால், ஐந்து தொகுதிகளை மட்டும், தி.மு.க., தருவதாகக் கூறியது.

இதை மா.கம்யூ., ஏற்கவில்லை. நீண்ட இழுபறிக்கு பின், நேற்று நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், ஐந்து தொகுதிகளை பெற முடிவானது.

அதன்படி, நேற்று இரவு, சென்னை அறிவாலயத்திற்கு மார்க்சிஸ்ட் மாநில செயலர் சண்முகம், முன்னாள் எம்.எல்.ஏ., கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் வந்தனர். பின், ஐந்து தொகுதிகளுக்கான ஒப்பந்தத்தில், முதல்வர் ஸ்டாலினும், சண்முகமும் கையெழுத்திட்டனர்.

பின் பேட்டியளித்த சண்முகம், "தி.மு.க., தொகுதி பங்கீடு குழுவினரிடம், கூடுதல் தொகுதிகள் கேட்டு தொடர்ந்து வலியுறுத்தினோம். எங்களுக்கு ஐந்து தொகுதிகள் கொடுத்ததில் திருப்தியில்லை,'' என்றார்.

அண்டா, குண்டா, மிக்சி கொடுத்து ஏமாற்ற நினைக்கின்றனர்: சீமான்

சென்னை, மார்ச் 24–

தமிழக சட்டசபை தேர்தலில், 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்துள்ள சீமான், நேற்று திருத்தணியில், தன் பிரசாரத்தை துவக்கினார்.

திருத்தணி முருகன் கோவிலில், நேற்று காலை குடும்பத்துடன் வழிபட்ட அவருக்கு, கட்சியினர், மூன்றரை அடி உயர வேல் வழங்கினர். அதை கையில் ஏந்தியவாறு, மூலவரை சீமான் வழிபட்டார். பின், முருகன் பாடலை பாடி, மாலையில் பிரசாரத்தை துவக்கினார்.

அப்போது, சீமான் பேசியதாவது:

டாக்டர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் என எல்லாரும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தனை போராட்டத்தை தந்தவர்கள், நல்லாட்சி என்கின்றனர். மகளிருக்கு 5,000 ரூபாயை, யார் பணத்தில் கொடுத்தனர். அவர்கள் பணம் கொடுத்து ஓட்டை உறுதி செய்கின்றனர்.

தமிழகத்தில் தனியார் பள்ளி, கல்லூரிகள் தரமாக இருக்கின்றன; அரசு நடத்தும் பள்ளி, கல்லூரிகள் தரமற்றவையாக இருக்கின்றன. தரமற்றவர்களின் கையில் அதிகாரம் இருப்பதே, இதற்கு காரணம்.

முதல்வர் மற்றும் அமைச்சர்களுக்கு உடலுக்கு முடியவில்லை என்றால், தனியார் மருத்துவமனைக்கு போகின்றனர்.

அரசு மருத்துவமனைகள் தரமில்லை. தனியார் முதலாளிகளால் தரமான மருத்துவத்தை கொடுக்கும்போது, அரசால் முடியவில்லை என்றால், அந்த அரசு தோற்று போகிறது.

மக்களுக்கு அண்டா, குண்டா, மிக்சி என, எதையாவது கொடுத்து ஏமாற்ற நினைக்கின்றனர். இந்நிலையை எப்படியாவது மாற்ற வேண்டும் என நினைக்கிறோம். இந்த இரண்டுக்கும் இடையே தான் போட்டி. ஜாதி, மதம், பணம் அடிப்படையில் அரசியல் செய்கிறவர்களிடம், ஒழுக்கம், பண்பாடு எங்கே இருக்கும்?

இதுவரை, ஒரு ரூபாய் கூட பணம் கொடுக்காமல், நல்லாட்சி வர வேண்டும் என தொடர்ச்சியாக போராடுகிறோம். ஒரு சதவீதம் கூட, ஓட்டு இல்லாதவர்களிடம், எவ்வளவு பேரம் பேசப்படுகிறது என்பதை பார்த்திருப்பீர்கள். அப்படி என்றால், 36 லட்சம் ஓட்டு வைத்திருக்கும் எங்களிடம் எவ்வளவு பேரம் பேசப்பட்டிருக்கும்?

பணமா, இனமா என்றால், நான் பிறந்த இனம் தான் முக்கியம். வாழ்க, ஒழிக கோஷம் போடுவதும், ஐந்து பத்துக்கும், அண்டா, குண்டா வாங்கி கொண்டு ஓட்டுப் போடுவதும் தன்மான இழுக்கு. தன்மானத்தை ஒருபோதும் தமிழன் அடமானம் வைக்க மாட்டான்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக பேட்டியளித்த சீமான், "திருத்தணி முருக பெருமான், 'என்னை நம்பினோர் அஞ்சுவதில்லை' என கூறியுள்ளார். அதற்காக தான் தேர்தல் என்னும் போர்களத்தில், பிரசாரத்தை திருத்தணியில் துவங்கியுள்ளேன்.

''மற்றவர்களுக்கு இது தேர்தல், எங்களுக்கு இது போர் என்பதால், முருகப்பெருமானை வணங்கிவிட்டு பிரசாரம் துவங்குகிறேன்," என்றார்.

ஆவணங்கள் தொலைந்தது தொடர்பான அறிவிப்பு

எனது கட்சிக்காரரின் அறிவுறுத்தலின் பேரில் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், ஒரகடம் கிராமத்தில் ச.வே.எண் – 42/6A விஸ்தீரணம் – ஏக்கர் – 3.35 மற்றும் 42/7B விஸ்தீரணம் – ஏக்கர் – 1.15 ஆக மொத்தம் – ஏக்கர் – 4.5 சொத்துக்களானது 1) திருமதி. உமா மகேஸ்வரி 2) திருமதி. மேகலாதேவி, 3) திருமதி. புஷ்பகாந்தி, 4) திருமதி. அனிதா கிருஷ்ணன் மற்றும் திருமதி. சுப்புலட்சுமி ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாகும். இதில் (1) வாலஜாபாத் சார்பதிவகத்தில் பதியப்பட்ட 14.03.1962 தேதியிட்டதான செட்டில்மெண்ட் ஆவணம் 693/1962, (2) வாலஜாபாத் சார்பதிவகத்தில் பதியப்பட்ட 27.06.1970 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் 1793/1970, (3) வாலஜாபாத் சார்பதிவகத்தில் பதியப்பட்ட 26.06.1970 தேதியிட்ட ஈடுகட்டிய சுவாதீன அடமான ஆவணம் 1794/1970 ஆகிய ஆவணங்கள் எனது கட்சிக்காரர் தொலைத்து விட்டார் மற்றும் கண்டுபிடிக்க இயலவில்லை. யாரேனும் மேற்கண்ட ஆவணங்களை கண்டுபிடித்தால் கீழ்கண்ட எனது முகவரிக்கு இந்த அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் தவறும் பட்சத்தில் மேற்கண்ட ஆவணங்கள் தொலைந்ததாகவும் மற்றும் கண்டுபிடிக்க இயலாதவையாக கருதப்படும்.

S. சக்திவேல்
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்
நெ.63, அம்பத்தூர் – வானகரம் ரோடு,
அம்பத்தூர் குப்பம், சென்னை – 600058
செல்: 9841183351

இடம்: சென்னை
தேதி: 24-03-2026

தெற்கு இரயில்வே

(சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு தொழிற்கூடம்)
போத்தனூர்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் தலைமை தொழிற்கூட மேலாளர், சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு தொழிற்கூடம், போத்தனூர், கோயம்புத்தூர் – 641 023 அவர்கள், வலைதளம் www.ireps.gov.in ல் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள் /ஒப்பந்தக்காரர்கள் www.ireps.gov.in வலைதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகையை ஆன்லைன் பேமெண்ட் கேட் வே மூலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட வழிமுறையில் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். SGW-S-203-OC-638413-26 தேதி 18.03.2026

1.	பணி பற்றிய விவரம்	சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு / தொழிற்கூடம் /போத்தனூர் – ல் உள்ள FAB ஷாப்புக்கு ஓர் ஆண்டு காலத்திற்கு ஆக்சிஜன் வாயு நிரப்பி சப்ளை செய்தல் (அதாவது – சிலிண்டர் ஒன்றுக்கு – 7 Cu. m) அளவீடு : 624 நெ
2.	பணியின் தோராய மதிப்பு	₹ 612986.40/- (18% வீதம் சரக்கு மற்றும் சேவை வரி உட்பட)
3.	செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்பு தொகை	₹ 12300.00/-
4.	பணியை முடிப்பதற்கான காலம்	12 மாதங்கள்
5.	ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	10-04-2026 அன்று 15.00 மணி
6.	இணையதள முகவரி	www.ireps.gov.in

மேலும் விவரங்களுக்கு, தலைமை தொழிற்கூட மேலாளர், சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு தொழிற்கூடம், போத்தனூர், கோயம்புத்தூர் – 641 023 அவர்கள் அலுவலகத்திற்கு வருகை தரவும்.

துணை தலைமை சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு பொறியாளர்
சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு /போத்தனூர்
தலைமை தொழிற்கூட மேலாளர்,
சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு தொழிற்கூடம், போத்தனூர் அவர்களுக்காக

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115, இணையதளம் : www.tvsholdings.com
மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com CIN : L64200TN1962PLC004792
நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு
நிறுவன விண்ணப்பம் CA (CAA)/15(CHE) 2026
நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருந்தக்கூடிய சட்ட பிரிவுகள் விவகாரத்திலும்
மற்றும்
நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவுகள் 230 முதல் 232 ஆகியவற்றின் கீழ்
டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு இடையிலான ஏற்பாட்டின் திட்டத்திலும்

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்,
1956ம் ஆண்டு நிறுவன சட்டத்தின்படி
CIN No: L64200TN1962PLC004792 உடன் நிறுவப்பெற்றது மற்றும் அதன் பதிவு அலுவலகம்
"சைதன்யா", எண். 12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை, தமிழ்நாடு 600 006, இந்தியா. ...விண்ணப்பதாரர் நிறுவனம்

நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டம் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு பிரசுரம்

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், 2026 மார்ச் 18ம் தேதியன்று மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு ("தீர்ப்பாயம்") பிறப்பிக்கப்பட்ட ("தீர்ப்பாய ஆணை") ஆணையால், நிறுவனங்களின் சட்டம் 2013 ("சட்டம்") பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான விதிகளின் கீழ், டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ("நிறுவனம்") மற்றும் அவைகளின் பங்குதாரர்கள் இடையிலான உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில் ("திட்டம்") கலந்தாலோசித்து, தக்கதென கருதும் பட்சத்தில் அதனை மாற்றங்களுடனோ அல்லது மாற்றமின்றியோ அங்கீகரிக்கும் பொருட்டு நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டத்தை நடத்திட வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தீர்ப்பாயத்தின் ஆணையின்படியும் மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டமானது ("கூட்டம்") வருகின்ற 2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு (இந்திய நேரப்படி), காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக மேற்சொன்ன சட்டத்தின் பொருந்தக்கக்க விதிகள் மற்றும் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (கடமைகளை பட்டியலிடல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்தல்) ஒழுங்காற்றுமுறைகள் 2015 மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் (MCA)ன் பொருந்தக்கக்க சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டு, அவ்வறிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக நடைபெறவுள்ளது என்பதை அறியவும்.

தீர்ப்பாயத்தின் ஆணை மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும், திட்டத்தின் நகல், பிரிவுகள் 230 முதல் 232ன்படி அறிக்கை மற்றும் நிறுவனங்களின் சட்டம் மற்றும் விதி 6ன் பிற பொருந்தக்கூடிய விதிகள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள், 2016க்கு ("CAA விதிகள்") அனுப்பப்பட்ட மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியவை ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், நிறுவனத்தின் அல்லது வைப்பகங்களின் பதிவேடுகளின் மின்னஞ்சல் முகவரிகள் இல்லாத பங்குதாரர்களுக்கு, கோரிக்கையின் பேரில் அனுமதிக்கப்பட்ட முறையில் தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி அனுப்பப்படும்.

மேற்சொன்ன சட்டம் பிரிவுகள் 230 முதல் 232 மற்றும் பிரிவு 102 உடன் படிக்கப்பட வேண்டிய இதர பொருந்தக்கூடிய விதிகள் (மற்றும் சட்டத்தின் பிற பொருந்தக்கூடிய விதிகள்) மற்றும் விதி எண் 6 CAA விதிகளின் கீழ் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) திட்ட விபர நகல், அறிக்கை மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றை நிறுவனத்தின் இணையதளம் www.tvsholdings.com, மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் கூட்டம் நடத்துவதற்கான இதர வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட முகமையாக செயல்படும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL")ன் இணையதளம் www.evoting.nsdl.com, பங்கு பரிவர்த்தனைகளுக்கான இணையதளம் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விரும்பினால், மேற்சொன்ன சட்டம் பிரிவுகள் 230 முதல் 232 – மற்றும் பிரிவு 102 மற்றும் CAA விதிகளின் விதி எண் 6ன் கீழான திட்ட விபர நகல், அறிக்கை ஆகியவற்றின் காகித வடிவ நகலை கம்பெனியின் பதிவு அலுவலகத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ள நிறுவனத்தில் உங்கள் பங்குதார் விவரங்களுடன் கம்பெனியின் செயலருக்கு corpsec@tvsholdings.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

தீர்ப்பாயம் Ms தீபிகா குமாரி, வழக்கறிஞர் அவர்களை மேற்படி கூட்டத்துக்கு தலைவராக நியமித்துள்ளது மற்றும் திரு V ஸ்ரீராம் ஆனந்த், வழக்கறிஞர் அவர்களை மேற்சொன்ன கூட்டத்துக்கான ஆய்வாளராகவும் செயல்படுவார்.

நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்கள் அறிவிப்பில் உள்ள அறிவுரைகளை பின்பற்றி, கூட்ட தேதிக்கு முன்பே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலமோ அல்லது மின்னணு வாக்களிப்பு மூலமாக கூட்டத்திலோ தங்களது வாக்குகளை அளிக்கலாம். கூட்டமானது காணொளி காட்சி மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சார்ந்த வழிமுறைகள் VC/OAVM மூலமாக நடைபெறுவதால், ஈட்டுறுதி பங்குதாரர்களின் நேரடி பங்கேற்புக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அதனால், ஈட்டுறுதி பங்குதாரர்கள் பதிலாள் நியமிக்கப்படும் வசதி இக்கூட்டத்துக்கு இல்லை. ஒரு உறுப்பினர், தனது வாக்களிப்பு உரிமையை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் செலுத்திய பிறகு இக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க இயலாது.

மேற்சொன்ன கூட்டத்திற்கான மின்னணு வாக்களிப்புக்கான கடைசி தேதி மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான நேர விபரம் கீழ்க்கண்டவாறு :

ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டம்	
மின்னணு வாக்காளர்கள் பட்டியல் வரையறுக்கப்பட்ட தேதி	ஏப்ரல் 18, 2026 சனிக்கிழமை
தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடங்கும் தேதி மற்றும் நேரம்	ஏப்ரல் 21, 2026 செவ்வாய்க்கிழமை, காலை 09.00 மணி (இந்திய நேரப்படி)
தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவுறும் தேதி மற்றும் நேரம்	ஏப்ரல் 23, 2026 வியாழக்கிழமை, மாலை 05.00 மணி (இந்திய நேரப்படி)

மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும், இதன் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு, NSDLஆல் தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறை செயலிழப்பு செய்யப்படும்.

வரையறுக்கப்பட்ட தேதியன்று, அதாவது ஏப்ரல் 18, 2026 – சனிக்கிழமை நிலவரப்படி, நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஈட்டுறுதி பங்குதாரர்கள் மட்டுமே, இந்த அறிவிப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது தனது வாக்களிப்பு உரிமையை செயலுறுத்தவும், கூட்டத்தில் பங்கேற்கவும் தகுதியுடையவராவார். ஈட்டுறுதி பங்குதாரர்களின் / பயன்பாட்டு உரிமையாளர் (மின்னணு முறையிலான பங்குதாரர்களாக இருக்கும் பட்சத்தில்) வாக்களிப்பு உரிமையானது, வரையறுக்கப்பட்ட தேதியன்று நிறுவனத்தில் உள்ள அவரது மூலதன ஈட்டுறுதி பங்குகளின் விகிதாச்சார வீதத்திலானது. பங்குகளை வாங்கியவர்கள் மற்றும் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களாக மாறியவர்கள் கூட்டத்தின் அறிவிப்பை நிறுவனத்தால் இக்கூட்டத்திற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு அது பெறப்பட்டதற்கு பிறகு பங்குகளை பெற்று, நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களாக மாறி, உறுப்பினர்களின் பதிவேடு அல்லது பயன்பாட்டு உரிமையாளர்களின் பதிவேட்டில் (வரையறுக்கப்பட்ட தேதி நிலவரப்படி) தமது பெயர்கள் இடம் பெற்றுள்ள நபர்கள் நிறுவத்தின் இணையதளம் அல்லது NSDLன் இணையதளத்தில் கூட்டத்திற்கான அறிவிப்பை பார்த்துக் கொள்ளலாம். அவ்வாறான நபர்கள், கூட்டத்திற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறையை பின்பற்றி உள்நுழைவுச் சொல் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம் / உருவாக்கிக் கொள்ளலாம்.

காகித வடிவிலான பங்குகளை வைத்திருந்து தங்களது மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்தில் பதிவு செய்யாத / புதுப்பிக்காத ஈட்டுறுதி பங்குதாரர்கள், அதனை ஃபோலியோ எண் விபரங்களுடன் கூடிய சுய கையொப்பமிட்ட நிரந்தர கணக்கு அட்டை நகலையும் கொண்ட எழுத்து பூர்வ விண்ணப்பத்தை நிறுவனத்திற்கு அதாவது இண்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், நிறுவனத்தின் பங்கு பரிமாற்ற முகமைகளுக்கும் einward@integratedindia.in அல்லது நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி contactus@tvsholdings.comக்கு கொடுத்து பதிவு செய்து கொள்ளுமாறு / புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் பங்குகளை வைத்திருந்து, தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பங்கேற்பாளர்களின் வைப்பகத்தில் பதிவு செய்யாத / புதுப்பிக்காத ஈட்டுறுதி பங்குதாரர்கள், எந்த பங்கேற்பாளர்களின் வைப்பகத்தில் தங்களது டிமேட் கணக்குகளை நிர்வகித்து வருகிறார்களோ அங்கு தமது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ளுமாறு / புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதன் மேற்குறிப்பிட்ட திட்டம், நிறுவனத்திற்கு ஈட்டுறுதி பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டால், அது தீர்ப்பாயத்தின் இதர அனுமதி மற்றும் ஒழுங்காற்று மையம் அல்லது இதர அதிகார அமைப்புகளின் (தேவைப்படும் பட்சத்தில்) இதர அங்கீகரிப்புகள், அனுமதிகள் மற்றும் இசைவுகளுக்கு கட்டுப்பட்டது.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான விபரங்கள் கோரப்படுமாயின், ஈட்டுறுதி பங்குதாரர்கள் பின்வரும் தொடர்பு விபரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Ms பல்லவி மாத்ரே, மேலாளர்
நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்,
டிரேட் வேர்ல்டு, ஏ விங், 4வது தளம், கமலா மில்ஸ் காம்பவுண்டு, லோயர் பரேல், மும்பை – 400013.
மின்னஞ்சல் முகவரி : evoting@nsdl.com
தொடர்பு எண்கள் : 022 – 4886 7000

ஏதேனும் இதர விபரம் தொடர்பான விசாரணைகளுக்கு, ஈட்டுறுதி பங்குதாரர்கள் பின்வரும் தொடர்பு விவரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. ஸ்ரீராம் S, பொது மேலாளர்,
இண்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
2வது தளம், கென்சஸ் டவர்ஸ், எண்.1, ராமகிருஷ்ணா தெரு,
வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600017.
மின்னஞ்சல் முகவரி : einward@integratedindia.in
தொலைபேசி : 044-2814 0801-03; தொலைநகல் : 044-2814 2479

இடம் : சென்னை
தேதி : 23.03.2026

R ராஜா பிரகாஷ்
கம்பெனி செயலாளர்